**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.23/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சீனிவாசன் | மதம் | : இந்து |
| த/பெ | : நாகைய்யா | ஜாதி | : -- |
| வயது | : 63 | கிராமம் | : வீரராகவபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**25.02.2025**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 07.08.1959 ம் தேதியிட்ட கிரைய சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய சான்று வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நாகைய்யாவின் இறப்பு சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நாகைய்யாவின் வாரிசு சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்று வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** செங்கம்மாள் இறப்பு சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** செங்கம்மாள் வாரிசு சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்று வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 20.12.2017 ம் தேதியிட்டு செங்கம்மாள் ராஜேந்திரனுக்கு கொடுத்த பொது அதிகார ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1071 ல் நாகைய்யா பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 02.02.2024 ம் தேதியிட்டு நான் பிரிவு 80 ன் உ.ந.ச. கீழ் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு

அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (5 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ 9 வரிசை (5 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)